நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
- 4 APR 2008
சென்னை - 600 005

(13)

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

**சுருக்கம்**

**கேளிக்கை வரி – கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈட்டு நிதியிலிருந்து கல் மற்றும் மண் சாலைகளை தார்சாலை மற்றும் கான்கிரிட் சாலைகளாக மாற்ற நகராட்சி நிர்வாக ஆணையருக்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் பத்து கோடிக்கு கூடுதலாக தொகை ஒதுக்கீடு மற்றும் கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதியில் போக்குவரத்துப் பாலம் கட்ட நிதி ஒதுக்கீடு – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.**

---

அரசு ஆணை (நிலை) எண். 152 — நாள் :2.4.2008

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை**

படிக்கப்பட்டது:

1) அரசு ஆணை (நிலை) எண்.22, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 14.2.2008.

2) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க எண். 21857/2007 ப்பி3 நாள். 22.12.2007.

3) அரசு ஆணை (நிலை) எண்.143, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 27.3.2008.

---

<u>ஆணை:</u>

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழில் பெயர்சூட்டப்படும் திரைப்படங்களுக்கு முழு வரி விலக்கு அளிப்பதால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுகட்டும் வகையில், ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.27.00 கோடியினை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கீழ்க்கண்ட பணிகளுக்காக ரூ.12.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

| | | ரூபாய் கோடி |
|---|---|---|
| 1 | மண் மற்றும் கல் சாலைகளை தார் சாலை மற்றும் கான்கீரிட் சாலைகளாக மாற்றிட | 10.00 |
| 2 | வாணியம்பாடி இன்னா சாலையில் புதிய பாலம் கட்ட பகுதி-II திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.80.00 இலட்சத்திற்கு மேல் கூடுதலாக ஆகும் செலவுத் தொகை | 0.40 |
| 3 | வேலூர் நகராட்சி அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட | 1.60 |
| | | 12.00 |

ஆனால் 2007–08 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் (Revised Estimate) வாணியம்பாடியில் பாலாற்றின் குறுக்கே ஜின்னா சாலையில் பாலம் கட்ட ரூ.0.40 கோடி தொகை வாணியம்பாடி நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதால் அத்தொகையை விடுவித்து மூன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2) இந்நிலையில், கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட வெண்ணாற்றின் குறுக்கே பாய்க்காரத் தெரு அருகில், போக்குவரத்து பாலத்தினை ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட பற்றாக்குறையாக உள்ள ரூ.19.63 இலட்சத்தினை மானியமாக வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) இச்செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில், வாணியம்பாடி ஜின்னா சாலையில் பாலம் கட்ட ரூ.40.00 இலட்சம் 2007–08 ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை விடுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதே பணிக்காக கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு முதலாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஒதுக்கப்பட்ட ரூபாய் 40.00 இலட்சத்தை வேறு பணிக்காக மாற்றம் செய்யலாம் என முடிவு செய்து, ரூ. 19.63 இலட்சத்தை (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம் மட்டும்) கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட வெண்ணாற்றின் குறுக்கே பாய்க்காரத் தெரு அருகில் போக்குவரத்து பாலம் கட்ட வழங்கியும், ரூ.20.37 இலட்சத்தை (ரூபாய் இருபது இலட்சத்து முப்பத்தேழாயிரம் மட்டும்) கல் மற்றும் மண் சாலைகளை தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலைகளாக மாற்ற, நகராட்சி நிர்வாக ஆணையருக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ரூபாய் பத்து கோடியுடன் கூடுதல் தொகையாக ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டுபிட்கோ , சென்னை –35
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை –3.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை 600 005.
மாநில கணக்காயர், சென்னை 600 018.
மாநில கணக்காயர், சென்னை 600 018 (பெயர் உறையில்)
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறைத் தலைவர்
அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை 600 009.

நகல்

முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை 600 009.
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்.

சென்னை 600 009.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதித் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை 600 009.
நிதித் துறை, சென்னை 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(வ/செ) துறை, சென்னை 600 009
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
3/4/08